RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2242

OPEN ACCESS

# தமிழ் நவீனக் கவிதைகளில் காணப்படும் பின் நவீனத்துவ அரசியல்

செ. மார்ட்டின் ராஜா [அ, *], மு. இராஜசேகரன் [அ]

[அ] தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி-620017, தமிழ்நாடு, இந்தியா.

# Postmodern Politics Found in Tamil Modern Poetry

S. Martin Raja [a, *], M. Rajasekaran [a]

[a] PG & Research Department of Tamil, Bishop Heber College (Autonomous), (Affiliated with Bharathidasan University), Tiruchirappalli–620017, Tamil Nadu, India

* Corresponding Author: smartinraja@yahoo.com

Received: 14-05-2022
Revised: 29-07-2022
Accepted: 11-08-2022
Published: 26-08-2022

Check for updates

**ABSTRACT**

One of the two notable elements of modernist politics that emerged in the West was fundamentalism, and the other was identity politics. Postmodern politics encompasses the inadequacies of modernist politics and alternative political ideas. The three elements of unleashing politics, the politics of remnants, and the politics of difference give rise to a fundamental understanding of postmodern politics. It is also necessary to divide it according to the Tamil context into differential feminist politics, Dalit feminist politics, Dalit politics, rainbow coalition or fusion politics, marginal politics, and Periyarist politics. Based on this, the postmodern politics found in the poems of modern Tamil poets such as Salma, Sukirtharani, Sivakami, Thirumagan, M.T. Muthukumarasamy, and T. Kaverinadan have been explained through this article.

**Keywords:** Postmodern Politics, Deconstructed Politics, Remainder Politics, Difference Politics, Dalit Politics, Rainbow Alliance

## முன்னுரை

நவீன அரசியலின் போதாமைகளையும் மாற்று அரசியல் சிந்தனைகளையும் உள்ளடக்கியதே பின் நவீனத்துவ அரசியல் எனப்படுகிறது. இது சாதிய, மதக் கோட்பாடுகளின் அடிப்படையிலான சமூகக் கட்டமைப்பை விமர்சனத்திற்கு உட்படுத்துகிறது. சமகாலச் சூழலுக்கு ஏற்ப பன்மைத்தன்மைக் கொண்ட அரசியலாகவும் பின் நவீனத்துவ அரசியல் திகழ்கிறது. நவீனத்துவ அரசியல் கூறுகளுள் அடித்தளவாதத்தையும் அடையாள அரசியலின் நெருக்கடியையும் பின் நவீனத்துவ அரசியல் பறைசாற்றுகிறது. கட்டவிழ்ப்பு அரசியல், மிச்சங்களின் அரசியல், வித்தியாச அரசியல் முதலியன பின் நவீனத்துவ அரசியலின் அடிப்படைக் கூறுகளாகத் திகழ்கின்றன. இதனடிப்படையில் தமிழ் நவீனக் கவிதைகளில் காணப்படுகின்ற பின் நவீனத்துவ அரசியலை பெண்ணிய அரசியல், தலித்திய அரசியல், வானவில் கூட்டணி அல்லது இணைவு அரசியல், மையம் x விளிம்புநிலை அரசியல், பெரியாரிய அரசியல் ஆகிய தலைப்புகளாகப் பகுத்துக் கொண்டு விளக்கி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பின் நவீனத்துவ அரசியலின் அடிப்படைக் கூறுகள்

பின் நவீனத்துவ அரசியலைப் புரிந்து கொள்வதற்கு நவீனத்துவ அரசியல் அவசியமாகிறது. பொதுவாக, “அரசியல் செயல்பாடுகள் என்பன மதத்தினூடாகவே சாத்தியம் அல்லது வேறு சொற்களில்

சொல்வதானால் மதத்திலிருந்து அரசியலைப் பிரிக்க இயலாத நிலை என்பது முடிவுக்கு வந்து, மதம் சாராத அரசியல் தொடங்கிய புள்ளியை நவீனத்துவ அரசியலாக நாம் அடையாளம் காணமுடியும். மதம் சாராத அரசியலுக்கு (secular politics) ஒரு நல்ல உதாரணமாகப் பிரெஞ்சுப் புரட்சியைச் (1789) சொல்லலாம். 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்பதான ஜனநாயக முழக்கங்கள் முதன் முதலாக அப்போது மேலுக்கு வந்தன. ஜனநாயகம், சமூக நல அரசுகள் (welfare state), பாராளுமன்றம், பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார அரசுகள், தேசிய விடுதலை, பாசிசம், அடிப்படைவாதம், சட்டத்திற்குட்பட்ட போராட்டங்கள், வன்முறையற்ற சட்டமீறல்கள், புரட்சிகர வன்முறை, பயங்கரவாதம் (terrorism), அகிம்சை என்பன போன்ற நவீனத்துவ அரசியல் சார்ந்த சொற்களும் கருத்தாக்கங்களும் நமக்கு பரிச்சயமானவை." என்று அ. மார்க்ஸின் கூற்று தெளிவுபடுத்துகிறது. மத்தியக் காலக்கட்டத்தில் ஐரோப்பியாவில் மதமும் அரசியலும் பிரிக்க இயலாத நிலை இருந்துள்ளது. இந்த நிலைமை முடிவுக்கு வந்த பின்னர் மதம் சாராத அரசியலின் (Secular Politics) தோற்றமே நவீனத்துவ அரசியல் (Modern Politics) எனப்படுகிறது. நவீனத்துவ அரசியலில் குறிப்பிடத்தக்க இரண்டு கூறுகளில் ஒன்று அடித்தள வாதம் மற்றொன்று அடையாள அரசியலாகும்.

## அடித்தளவாதம்

நவீனத்துவ அரசியல் இயக்கங்களில் ஏற்படுகின்ற சிக்கல்களுக்குத் தர்க்கம் சார்ந்தத் தீர்வுகளை அளிப்பது அடித்தளவாதம் எனப்படுகிறது. சான்றாக, முதலாளித்துவமானது தாராள முதலாளியக் கோட்பாடுகளையும் பொதுவுடைமைக்கட்சிகள் மார்க்சியத்தையும் பாசிசக் கட்சிகள் இனத் தூய்மைக் கோட்பாடுகளையும் அடித்தளங்களாகக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு நவீனத்துவ அரசியல் இயக்கங்கள் ஒவ்வொன்றும் மற்றொன்றைச் சார்ந்திருப்பதையே பின் நவீனத்துவம் அபத்தம் என்கிறது. மேலும், அடித்தளவாதமே வன்முறை என்று குறிப்பிடுகிறது. அடித்தள வாதத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்படும் கருத்தாக்கங்களைப் பின் நவீனத்துவ அரசியல் கட்டவிழ்ப்புச் செய்கிறது. "எல்லாப் பிரச்சினைகளையும் எல்லாக் காலங்களிலும் ஆராயத்தக்க அடித்தளமாக ஒன்றை அறிவிக்கும்போது அதன் மீது ஒரு மொத்தத்துவ முழுமைப்பண்பு (Totality) ஏற்றப்படுவது கவனிக்கத்தக்கது. இத்தகைய மொத்தத்துவப் பண்புடன் 'காலங்கடந்த' (Transcendetal) 'என்றென்றைக்குமான' (Eternal) உண்மை என்கிற உரிமையை நிலைநாட்டும்போது இந்தக் கதையாடல் ஒரு 'பெருங்கதையாடலாக' (Metanarrative) வடிவெடுக்கிறது." இக்கருத்து அடித்தளவாதத்தின் பண்புகளைத் தெளிவுபடுத்துகிறது (Marks, 2010). இவ்வுலகில் ஒவ்வொரு மனிதனும் அன்றாட வாழ்க்கையில் வெவ்வேறு வகையிலான சிக்கல்களை எதிர்கொண்டு வாழ்ந்து வருகின்றான். இந்நிலையில் அடித்தளவாதம் சிக்கல்களுக்கு ஒரே தீர்வையே தீர்வாகக் கொள்வதை பின் நவீனத்துவம் அபத்தம் என்கிறது. மேலும், கட்டமைக்கப்பட்ட அடித்தளவாதத்திற்கு இணங்காத அரசியல் இயக்கங்கள் வன்முறையாக அகற்றப்படுவதையும் பின் நவீனத்துவ அரசியல் சுட்டிக்காட்டுகிறது. "இதுவரை 'கடவுள்' 'இயற்கை' 'வரலாறு' என ஏதோ ஒரு வெளி ஆற்றலுக்கே மனிதகுலம் தலைவணங்கி வந்துள்ளது. முதன் முதலாகப் பின் நவீனத்துவம்தான் தனக்கான வரலாற்றைப் படைத்துக் கொள்ளும் வாய்ப்பை அளிக்கிறது. அடித்தளவாதம் குறிப்பான பிரச்சினைக்கு அதற்கு வெளியேயுள்ள ஒரு எதார்த்தத்திலிருந்து விடை தேடுகிறது. பின் நவீனத்துவமோ குறிப்பான பிரச்சினைக்கு அதற்குரிய எதார்த்தத்தை உருவாக்கிக்கொள்கிறது. மூடிய அடித்தளம் என்பதற்குப் பதிலாக நாலாபுறமும் திறந்த பெருவெளியை (horizon) ஏற்படுத்துகிறது." பின் நவீனத்துவ அரசியலில் அடித்தளவாதம் கேள்விக்குட்படுத்தப்பட்டு தனிமனிதச் சுதந்திரத்திற்கு முன்னுரிமை அளிப்பது புலனாகிறது (Marks, 2010). மேலும், ஒரு சிக்கலுக்கு ஒன்றுக்கும் மேற்பட்டத் தீர்வுகளை உருவாக்கி தனிமனித விருப்பத்திற்கு விட்டுவிடுகின்ற பண்பும் பின் நவீனத்துவ அரசியலில் காணப்படுகிறது.

## அடையாள அரசியல்

அடையாள அரசியல் என்பது அடித்தளவாதத்தின் மூலம் கட்டமைக்கப்பட்டப் பெருங்கதையாடல் வழி மக்களை ஒற்றை அடையாளமுள்ள அரசியல் சமூகமாக வரையறுப்பதே

அடையாள அரசியல் எனப்படுகிறது. சாதி, மதம், இனம், மொழி, வர்க்கம், நிறம் போன்ற தனித்த அடையாளங்களுடன் உயிரியல் அடித்தளத்தில் (Biological Foundation) பெண், மரபினம் முதலிய அடையாளங்களும் கட்டமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கட்டமைக்கப்பட்ட ஒற்றைப் பெரு அடையாளத்திற்குள் உள் வேறுபாடுகளும் அலட்சியம் செய்யப்படுகின்றன. அடையாள அரசியலில் பெண் உறுப்புகளின் அடிப்படையில் மட்டுமே அடையாளம் காணுகின்ற போக்கினையும் அறிய முடிகிறது. மேலும், இத்தகைய அடையாளங்கள் நிரந்தரமானது என்றும் வரையறைக்குட்பட்டதென்றும் அடையாள அரசியலில் விளக்கப்படுகிறது. "அடையாள அரசியல் மற்றதன் (Other) இருப்பையும், நியாயத்தையும் மறுத்தது. தனது விளிப்பிற்கு உட்பட்டவர்கள் வேறெந்த அடிப்படையிலும் தற்காலிகமாகவேனும் மற்றதாக இருக்கும் உரிமையைப் பறித்தது." என்று அடையாள அரசியலை வரையறுக்கிறார் (Marks, 2010). மேலும், அடையாள அரசியலின் பணிகள் மூன்றாகப் பகுக்கப்படுகிறது. ஒன்று, மக்களை முதலில் அடையாளப்படுத்தி அணித் திரட்டுகிறது. இரண்டாவது, விளிம்புநிலை மக்களின் உரிமைகளைப் பறித்து அவர்களின் அதிகாரத்தைக் கைப்பற்றுகிறது. மூன்றாவது, அதிகாரத்தைக் கொண்டு விளிம்புநிலை மக்களை ஆளுகை செய்கிறது. இவ்வாறு விளிம்புநிலையினர் அரசியல் அதிகாரம் இல்லாதவர்களாக நடத்தப்படும் ஆதிக்கப் போக்கு அடையாள அரசியலில் மிகுந்து காணப்படுகிறது. இத்தகைய அடையாள அரசியலுக்கு எதிராகப் பின் நவீனத்துவ அரசியல் அமைந்துள்ளது. மேலை நாடுகளில் தோன்றிய நவீனத்துவ அடித்தளவாதமும் அடையாள அரசியலும் நெருக்கடிக்கு உட்படுகிறது. இவற்றிற்குச் சான்றாக, பிரெஞ்சு மாணவர் புரட்சி (1789), பொதுவுடைமை அறிக்கை (1848), பாரிஸ் கம்யூன் (1871), ரஷ்யப் புரட்சி (1917), காலனிய விடுதலைகள், சீனப் புரட்சி (1945 - 50), 1968இல் ஏற்பட்ட அரசியல் எழுச்சிகள், கிழக்கு ஐரோப்பிய அரசியல் மாற்றங்கள் முதலியனவற்றைக் குறிப்பிடலாகும். மேலும், இவ்வாறான அரசியல் இயக்கங்கள் நவீனத்துவ அரசியல் கூறுகளுடன் பின் நவீனத்துவ அரசியல் கூறுகள் சிலவற்றையும் உள்வாங்கிக் கொண்டு செயல்பட்டன என்பர். இப்புரிதலின் அடிப்படையில் பின் நவீனத்துவ அரசியலின் அடிப்படைக் கூறுகளைப் பின்வருமாறு மூன்றாகப் பகுத்துக் காணலாம்.

## கட்டவிழ்ப்பு அரசியல்

பின் நவீனத்துவ சிந்தனையாளர் ழாக் தெரிதா (Jacques Derrida) என்பவரால் 1966இல் கட்டவிழ்ப்பு சிந்தனை தோற்றுவிக்கப்படுகிறது. இவரது கட்டவிழ்ப்பு சிந்தனையே கட்டவிழ்ப்பு அரசியலுக்கும் வித்திட்டுள்ளது. "ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள கருத்து கட்டவிழ்ப்பு செய்யப்படும் போது புதுப்புதுக் கருத்துக்கள் கிடைக்கின்றன." என்று கட்டவிழ்ப்பு பற்றி குறிப்பிடுகிறார் (Suresh, 2009). ஒரு கருத்து தொடர்ந்து விவாதிக்கப்படும் பொழுது பல புதிய கருத்துக்கள் தோன்றுவதே கட்டவிழ்ப்பு அரசியலின் தனித்தன்மைகள் எனப்படுகிறது. பின் நவீனத்துவ அரசியலின் அடிப்படைக் கூறுகளுள் கட்டவிழ்ப்பு அரசியல் குறிப்பிடத்தக்க ஒன்றாகவும் பார்க்கப்படுகிறது. "சில முரண் உருவாக்கங்களில் உள்ள அபத்தத்தைச் சுட்டிக்காட்டுவதும், சில தீராத முரண் புதிர்களுக்கு எளிமைப்படுத்திய தீர்வொன்றை நாடுவதிலுள்ள அபத்தத்தைச் சுட்டிக்காட்டுவதுமே கட்டவிழ்ப்பின் அரசியல்." என்று கட்டவிழ்ப்பு அரசியலை வரையறுக்கின்றார் (Marks, 2010). வரையறுக்கப்பட்ட ஏதேனும் ஒரேயொரு தீர்வுக்குள் சிக்கிக் கொண்டு இடர்படுவதைவிடத் தீர்வுகள் எதுவுமற்ற முரண்களுக்கிடையில் (Aporia) அலைக்கழிக்கப்படுவதும் கட்டவிழ்ப்பு அரசியலின் ஒரு பண்பாகவும் அறியமுடிகிறது.

## மிச்சங்களின் அரசியல்

ழாக் தெரிதா, மிஷைல் ஃபூக்கோ (Micheal Foucault), கில்ஸ் டெல்யூஸ் (Gills Delecuce) - பெலிக்ஸ் கத்தாரி (Felix Guattari), ழீன் பிரான்சுவா லியோதார்த் (Jean - Francois Liyotard), லபார்தே நான்சி (Labarthe Nancy) முதலியோர் பிரெஞ்சு பின் நவீனத்துவ சிந்தனையாளர்கள் ஆவார். இவர்கள் 'காலத்தையும் வித்தியாசத்தையும்' மிகவும் பரிவுடன் எடுத்துக்கொள்ளக் கூடியதே 'மிச்சங்களின் அரசியல்' என்று குறிப்பிடுகின்றனர். மிச்சங்களின் அரசியலில் பொதுவான 'அரசியல் அமைப்பிற்கும்' 'மிச்சத்திற்கும்' இடையிலான வேறுபாடுகள் முக்கியமான ஒன்றாகவும் வலியுறுத்தப்படுகிறது. "நீங்கள் வரையறுக்கிற

அரசியல் சமூகத்திற்கும் உங்கள் வரையறுப்பிற்குக் கையகப்படாது தாண்டி நிற்கக்கூடிய அல்லது உங்களால் புறக்கணிக்கப்பட்ட மிச்சங்களுக்குமான வேறுபாடு முக்கியமானது. இந்த 'மிச்சங்கள்' தமக்குரிய அரசியலைத் தேர்வு செய்து கொள்ளல் தவிர்க்க இயலாது. இந்த மிச்சங்களின் அரசியல் (politics of remainder) வெளிப்பாடு பெறும் காலம் பின் நவீன நிலைக் காலம்." என்கிறார் (Marks, 2010), 'மிச்சங்கள்' என்பது விளிம்புநிலை மக்களைக் குறிக்கிறது. இம்மக்கள் தங்களுக்குரிய அரசியலைத் தாங்களே தேர்வு செய்து கொள்ளும் அரசியலே மிச்சங்களின் அரசியலாகும்.

## வித்தியாச அரசியல்

அரசியல் வரலாற்றில் 1968 ஆம் ஆண்டு வித்தியாச அரசியலின் பிறப்பாகவும் பார்க்கப்படுகிறது. நவீனத்துவ அரசியலில் தத்துவங்கள், அரசமைப்புகள், இயக்கங்கள் முதலியனவற்றை மறு பரிசீலனை செய்கின்ற சிந்தனை போக்குகள் உலகமெங்கிலும் மிகுந்து காணப்பட்டன என்பர். "மையம் கொண்ட, ஒருங்கிணைந்த, தர்க்கப் பூர்வமான தன்னிலை என்கிற நவீனத்துவக் கருத்தாக்கத்திற்குப் பதிலாக உணர்வுபூர்வமற்ற, வேட்கைகளால் தூண்டப்பட்ட, பன்முகச் சுயங்களுடைய தன்னிலை என்கிற சிந்தனையை இவை உள்வாங்கிக் கொண்டன. இந்த அடிப்படையில் 'வித்தியாச அரசியல்' என்கிற சிந்தனையை முன்மொழிந்தன." என்று வரையறுக்கிறார் (Marks, 2010). மேலை நாடுகளில் பிரெஞ்சு மாணவர் இயக்கங்கள், வியட்நாம் போர் எதிர்ப்பு நடவடிக்கைகள், தேசிய இனங்களின் எழுச்சிகள், பசுமை இயக்கங்கள், அமெரிக்கக் கருப்பர் இயக்கங்கள், மனித உரிமை இயக்கங்கள், வேலை இல்லாதோரின் போராட்டங்கள் முதலியன நவீனத்துவ அரசியலின் நெருக்கடியை உணர்ந்துகொண்டு பின் நவீனத்துவத் திருப்பங்களுடன் (Post Modern Turns) செயல்பட்டதே வித்தியாச அரசியல் எனப்படுகிறது. இவ்வாறு மேலை நாடுகளில் தோன்றிய கட்டவிழ்ப்பு அரசியல், மிச்சங்களின் அரசியல், வித்தியாச அரசியல் ஆகிய மூன்று கூறுகளும் பின் நவீனத்துவ அரசியல் பற்றிய அடிப்படைப் புரிதலை ஏற்படுத்துவனவாகும்.

## பெண்ணிய அரசியல்

மேலை நாடுகளில் குறிப்பாக, அமெரிக்க அடிமைச் சூழலில் வெள்ளைப் பெண்களுக்கும் கருப்புப் பெண்களுக்கும் இடையே 'வித்தியாசம்' என்பது காணப்படுகிறது. இதேபோன்று இந்தியத் தீண்டாமைச் சூழலில் ஆதிக்கச் சாதிப் பெண்களுக்கும் விளிம்புநிலைப் பெண்களுக்கு இடையிலும் வித்தியாசம் பொருத்திப் பார்க்கத்தக்கதாக உள்ளது. அந்தவகையில் இந்தியச் சூழலிலும் வித்தியாசப் பெண்ணியம், தலித் பெண்ணியம் ஆகிய இரு போக்குகளைச் சுட்டிக்காட்டலாம்.

## வித்தியாசப் பெண்ணியம்

பின் நவீனத்துவத்தின் அடிப்படைக் கூறுகளுள் வித்தியாச அரசியலும் ஒன்றாகும். இதிலிருந்து தோன்றியதே வித்தியாச பெண்ணியம் என்றழைக்கப்படுகிறது. ஏங்கலா டேவிஸ் (Angela Devis), குளோரியா ஜோசப் (Gloria Joseph, லிண்டா நிக்கல்சன் (Linda Nicholson) முதலியோர் மேலை நாடுகளில் வித்தியாசப் பெண்ணியவாதிகளாகவும் அறியப்படுகின்றனர். தந்தைவழிச் சமூகப் பாலாதிக்க அதிகாரங்களுக்கும் ஒழுங்குபடுத்தல்களுக்கும் எதிராகப் பெண்ணிய இயக்கங்களும் 'லெஸ்பியன்' 'கே' இயக்கங்களும் கூட்டாகச் சேர்ந்து பெண்ணிய அரசியலை நுட்பமானத் தளத்திற்கு இட்டுச்சென்றதே 'வித்தியாசப் பெண்ணியம்' எனப்படுகிறது.

தமிழ்ச் சூழலில் வித்தியாசப் பெண்ணியம் என்பது பொதுவான பெண்ணியப் பார்வையிலிருந்து வேறுபடுகின்றன. இதுவரை நேர்க்கோட்டில் பார்த்தவைகளை மாற்றி எல்லாவற்றையும் தலைகீழாகக் கவிழ்த்துப் பார்க்கச் சொல்கிறது. பின் நவீனத்துவ அரசியலில் யதார்த்த நிலை என்பது ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. மாறாக, யதார்த்தத்தைச் சூழலுக்கு ஏற்ப உருவாக்கிக் கொள்கின்ற தனித்தன்மையும் வித்தியாசப் பெண்ணியத்தில் பயின்று வந்துள்ளது. இது பின் நவீனத்துவ அரசியலிலிருந்து வித்தியாசப் பெண்ணியம் கடன் பெற்றிருக்கும் ஒரு பண்பென்றும் குறிப்பிடலாம்.

"நான்

தலைகீழாகத் தலைவாரிக்கொண்டிருப்பதை

தலைகீழாகச் சமைப்பதை

தலைகீழாக உணவருந்துவதை

தலைகீழாக அமர்ந்து குழந்தைக்குப்

பாலூட்டுவதை

தலைகீழாகப் புத்தகம் வாசிப்பதை"

'கோணம்' என்ற இக்கவிதையில் வரும் 'நான்' என்பது ஒரு பெண்ணைக் குறிக்கிறது (Salma,2014). பெண் தலைவாரிக் கொண்டு சுத்தமாக இருத்தல், குடும்ப உறுப்பினர்களுக்கு உணவு தயாரித்தல், பசிக்கும் பொழுது உணவு உட்கொள்ளுதல், குழந்தையை பராமரித்தல், ஓய்வு நேரங்களில் புத்தகம் வாசித்தல் போன்றவை இல்லறப் பெண்களுக்குரிய ஒழுக்கப் பண்புகளாக தந்தைவழி ஆதிக்கச் சமூகம் கட்டமைத்துள்ளது. இத்தகைய ஒழுக்கப் பண்புகளை தலைகீழாகக் கவிழ்த்தும் யதார்த்தப் பெண்களின் இயல்புநிலையிலிருந்தும் வித்தியாசப் பெண்ணிய அரசியல் முன்னெடுக்கப்படுவதை காணமுடிகிறது.

## தலித் பெண்ணியம்

அமெரிக்க அடிமைச் சூழலில் வெள்ளைப் பெண்களுக்கும் கருப்புப் பெண்களுக்கும் இடையேயான வித்தியாசம், இந்திய தீண்டாமைச் சூழலில் உயர்சாதிப் பெண்களுக்கும் தலித் பெண்களுக்கும் இடையிலும் பொருத்திப் பார்க்கத்தக்கதாக உள்ளது. இதனடிப்படையில் உருவான கருத்தாக்கமே தலித் பெண்ணியம் எனப்படுகிறது. தமிழ்ச் சமூகத்தில் தலித் பெண்ணியம் என்பது ஆணாதிக்கத்திற்கு இணையாகச் சாதியத்தையும் பார்ப்பனியத்தையும் அரசியல் இலக்காகக் கொண்டு செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதை, கவிஞர் சுகிர்தராணி,

"செத்துப்போன மாட்டைத் தோலுரிக்கும்போது காகம் விரட்டுவேன்

வெகுநேரம் நின்று வாங்கிய ஊர்ச்சோற்றைத் தின்றுவிட்டு

சுடுசோறெனப் பெருமைபேசுவேன். தப்பட்டை மாட்டிய அப்பா

தெருவில் எதிர்ப்படும்போது முகம் மறைத்து கடந்துவிடுவேன்

அப்பாவின் தொழிலும் ஆண்டுவருமானமும் சொல்ல முடியாமல்

வாத்தியாரிடம் அடிவாங்குவேன். தோழிகளற்ற பின்வரிசையி லமர்ந்து

தெரியாமல் அழுவேன். இப்போது யாரேனும் கேட்க நேர்ந்தால்

பளிச்சென்று சொல்லிவிடுகிறேன் பறச்சி என்று"

எனும் கவிதையில் பதிவு செய்கின்றார் (Sukirtharani,2010). சமூகத்தில் சாதி என்ற வன்மம் ஆழமாகவேரூன்றி இருக்கிறது. தலித் குடும்பத்தில் பிறந்தச் சிறுமி, சாதிய அடுக்கு நிலை சமூகத்தில் எதிர்கொள்கின்ற தீண்டாமைகளை கவிஞர் அடிக்கோடிட்டுக்காட்டுகிறார். தந்தையின் சாதியையும் ஆண்டு வருமானத்தையும் பள்ளி ஆசிரியரிடம் தெரிவிக்க இயலாத அளவிற்கு சாதிய தீண்டாமை புரையோடியிருப்பதையும் அறியமுடிகிறது. இந்நிலையில் பின் நவீனத்துவ சாய்வுடைய ஒரு தலித் பெண் ஆதிக்கச் சாதிக்கு எதிராக தன் சாதியை பட்டென்று அறிவிக்கும் துணிவை கொண்டிருப்பதே தலித் பெண்ணிய அரசியல் என்பதும் புலனாகிறது.

## தலித்திய அரசியல்

ஒரு தலித், தலித்திய அரசியலை முன்னெடுத்துச் செல்வதில் பல்வேறு இடர்களும் சவால்களும் காணப்படுகின்றன. தலித் அரசியலில் பொதுவான எதிரியை எதிர்ப்பதற்கு முன்னர், நம் அருகிலுள்ள பகைவர்களை முதலில் அடையாளம் காண வேண்டுமென பின் நவீனத்துவ தலித் அரசியல் அறிவுறுத்துகிறது. இதனை மெய்ப்பிக்கின்ற வகையில் கவிஞர் சிவகாமியின் 'ஞானவெட்டியான்' என்ற கவிதை,

"அதிர்ச்சியுடன் புரிந்து கொள்கின்றேன்

நம்மிடையே உள்ள அடுக்குகளை

நம்மை நாமே சிறைப்படுத்தும் உத்தியை

தீட்டு புனிதக் கோட்பாட்டை

உள்வேகும் சூளைக் கல்லென

குழப்பமே மிஞ்சும் அதன் உட்புறமென

மனிதம் கடந்த அதீத அதிகார வெறியை

அறியாமையை இயலாமையைத்

துளியும் நேசிக்க இயலவில்லை

மாற்றும் நம்பிக்கையில்

உரையாடல் துவங்குகிறேன்

சுலபமாக இல்லை

பிணங்களைப் பிழைக்க வைப்பது

வெட்டிப் புதைக்க இனி

வெட்டியானாவதே சரி"

தலித்துகள் சாதியத்தாலும் புனிதக் கோட்பாட்டாலும் பிளவுப்பட்டுள்ளனர் (Sivagami, 2012). இது அவர்களுக்கிடையில் சகோதரத்துவத்தை மறைத்து வெறுப்புணர்வை வளர்த்துள்ளது. இன்று பெரும்பாலான தலித்துக்களுக்கிடையே ஒற்றுமை இல்லையென்பதைக் கண்டு, அதைவிட்டுக் கடந்து செல்ல இயலாத ஒரு தலித்தின் மனநிலையை இக்கவிதை பதிவு செய்கிறது. மேலும், ஒரு தலித்தால் மட்டுமே தலித்துக்களை ஒன்றிணைத்து உரையாடல்வழி பின் நவீனத்துவ தலித் அரசியலை முன்னெடுத்துச் செல்ல முடியுமென்பதைக் கவிஞரின் வழிநின்று அறியமுடிகிறது.

## வானவில் கூட்டணி அல்லது இணைவு அரசியல்

ஒரு பொது எதிரிக்கு எதிராகவும் குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும் ஒருங்கிணைவதே 'வானவில் கூட்டணி' எனப்படுகிறது. இக்கூட்டணி வரலாற்றுப் பூர்வமானது என்றும் சிறிய பெரிய குழுவாகவும் இது மாறுபடும் என்றும் விளக்கப்படுகிறது. பின் நவீனத்துவ பன்மைத் தன்மையின் அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களை ஒருங்கிணைத்து அவர்களின் தனித்த அடையாளங்களை பாதுகாக்கின்ற இயக்கமாகவும் 'இணைவு அரசியல்' அமைகிறது. இந்துத்துவம், இசுலாமியம், கிறித்துவம், பாசிசம், ஏகாதிபத்தியம், முதலாளித்துவம், தாராளமயம், தனியார்மயம், உலகமயமாக்கம் போன்றனவற்றிற்கு ஒரு பொது எதிரியாகவும் வானவில் அரசியல் வரையறுக்கப்படுகிறது. வானவில்லின் ஏழு வண்ணங்களும் தத்தமது தனித்த அடையாளங்களை இழக்காமல் இணைவதைப் போன்று ஒரு பொது எதிரியிடமிருந்து தனித்த அடையாளங்களையும் உரிமைகளையும் மீட்டெடுக்கச் சிறுசிறு

அமைப்புகளுக்கிடையில் ஏற்படுத்தப்படுகின்ற அரசியல் ஒருங்கிணைப்பே இணைவு அரசியல் அல்லது வானவில் கூட்டணி அரசியல் என்றும் வரையறுத்துக் கொள்ளலாம்.

“பச்சை ரத்தமும் படையல் சோறும்
சாராயமும் செய்யதுபீடியும் கேட்கும்
சுடலைமாடனும் மாயாண்டிக் கருப்பனும்
அய்யனாரும் அரிவாள் ஏந்தியபடி
ஊர் எல்லையில் காவல் காத்துக் கொண்டிருக்க
தயிர்சாதமும் வெண் பொங்கலும்
சுண்டலும் கொழுக்கட்டையும்
தின்று வளரும் பெருங்கடவுளர்கள்
கொலைக் கருவிகள் ஏந்தி
கடல்களைப் பிளந்து வனங்களை எரித்து
மலைகளை உருட்டி பொடி பொடியாக்கி
திசைகளெங்கும் மரண ஓலம் எதிரொலிக்கும்படி
துஷ்டர்களைச் கொன்றொழித்து
நிலமெங்கும் இரத்தத்தால் நனைத்தார்கள்
என்று கதையளந்து கொண்டிருக்கிறார்கள்.”

திருமகனின் ‘கடவுள் வேலை’ என்ற இக்கவிதையில் சிறுதெய்வங்களின் வழிபாட்டு முறைகள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், உணவுமுறைகள் போன்ற தனித்த அடையாளங்கள் காக்கப்படுவதற்கு பொது எதிரிகளாகப் பெருங்கடவுள்கள் முன்னிறுத்தப்படுவது புலனாகிறது (Thirumagan, 2014). மேலும், சக மனிதர்களாக வாழ்ந்து மறைந்தவர்களை சிறுதெய்வங்களாகவும் பாதுகாப்பு அரணாகவும் வழிபடும் மரபு தமிழ்ச் சமூகத்தில் உள்ளது. அதேவேலையில் திருமால், சிவன், விநாயகர் போன்ற பெருங்கடவுள்களைக் கட்டமைப்பதன் வழி பெருங்கதையாடலானது, மக்களின் தனித்த அடையாளங்களை மறைத்துப் பொதுமைப்படுத்துகிறது. இத்தகைய போக்குப் பின் நவீனத்துவ அரசியலின் பொது எதிரியாகப் பார்க்கப்படுகிறது. இவற்றிற்கு எதிராக சிறுதெய்வங்களின் ஒருங்கிணைவை உருவாக்குவதும் பின் நவீனத்துவ ‘இணைவு அரசியலின்’ பண்பென்பதை கவிஞரின் வழிநின்று அறிய முடிகிறது.

## மையம் x விளிம்புநிலை அரசியல்

மேற்கத்திய சிந்தனை மரபு முழுவதும் ‘ஓர் ஆதி உண்மையும் ஓர் இலட்சிய உருவாக்கத்தையும்’ கொண்டிருக்கின்றன. சாரம் (Essence), கடவுள் (God), இருத்தல் (Being) ஆகியனவற்றை மையமாகவும் கொண்டுள்ளன. மேலும், இவைகள் ஒற்றை அர்த்தத்தை வலியுறுத்துகின்றன. “இரண்டாயிரம் ஆண்டுகாலமாக மேற்கத்திய நாகரிகம் கிறிஸ்துவ மதத்தையும் இயேசு கிறித்துவையும் ‘மைய’மாகக் கொண்டுள்ளது. அதைப் போலவே இந்தியாவில் இந்து மதமும் அரபுநாடுகளில் இஸ்லாமிய மதமும் ஜப்பானில் புத்த மதமும் மையங்களாக இருக்கின்றன.” இக்கருத்து ஈண்டுநோக்கத்தக்கதாகும் (Suresh, 2009). இவ்வாறு மதங்களும் கோட்பாடுகளும் ‘மையமாக’ (Centre) கொண்டு வளர்ந்து வந்துள்ளன. இம்மையமானது தனது ஆளுகைக்குட்பட்டப் பகுதிகளில் சிறுபான்மையாக இருக்கின்ற ‘மற்ற’ (Other) மதங்களையும் கோட்பாடுகளையும் விளிம்புநிலைக்குத் தள்ளிவிடுகின்றப் போக்கும் மிகுந்து காணப்படுகிறது. இத்தகைய மையம் x விளிம்பநிலை என்ற அரசியல், சமூகத்தில் பல்வேறு வடிவங்களிலும் ஊடுருவிக் காணப்படுகின்றன.

சமூகத்தில் திருநங்கையர்கள் மூன்றாம் பாலினத்தவர்களாக பார்க்கப்படுகின்றனர். பொதுவாக, குடும்பம், சமூகம், கல்வி, அரசியல், பொருளாதாரம் போன்றவற்றிலும் திருநங்கையர்கள் விளிம்புநிலையினராக நிறுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் மையத்திலிருந்து வேறுபட்டு தங்களுக்கான விளிம்புநிலை அரசியலை தாங்களே முன்னெடுக்க வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. இதனை அடியொற்றிய 'புனைவு அழிதல்' என்ற கவிதைப் பின்வருமாறு பதிவு செய்கிறது.

"கூந்தல் வளர்த்து

பலமுறை முகக்கண்ணாடி பார்த்து

பொட்டிட்டு உதட்டு சாயம் பூசி

பலூன் முலை கட்டி

துணிப்பந்து திணித்து

பின்பாகம் கொழுக்க வைத்து

கால் சராய் கீழிறக்கி

தொப்பூழின் கீழ் பூனை மயிர் காட்டி

வலம் வரும் தேர் போல் கை வீசி

கால் அகட்டி கூட்டம் நிறைந்த

தெரு ஏகினாள் அவள்

அநாமதேய ஆண் கைகள் கசக்கியதால்

பலூன் முலையொன்று வெடித்துச் சிதற

அவள் அவளல்ல

அவன் என்பதாகவே கூட்டம் எக்களிக்க

ஓடும் ரயிலின் முன் பாய்ந்தால் அவள்"

இதுவரை மைய சமூகம் திருநங்கையர்களுக்கு இழைத்துள்ள அநீதிகளை இக்கவிதை இயம்புகிறது (Muthukumarasami, 2012). சமூகத்தின் பொதுவெளியில் அவர்களும் சகமனிதர்களை போன்று வாழும் உரிமையை உறுதிசெய்ய வேண்டுமென்பதை வலியுறுத்துவதே பின் நவீனத்துவ விளிம்புநிலை அரசியல் என்பது தெளிவாகிறது.

## பெரியாரிய அரசியல்

'பகுத்தறிவே பயங்கரம், அறிவே வன்முறை' என்று பின் நவீனத்துவம் முழக்கமிடுகிறது. அறிவொளிக் காலத் தத்துவ மரபை (Enlightenment) விமர்சனத்திற்கு உட்படுத்துகிறது. இந்நிலையில், பெரியார் தனது வாழ்நாட்கள் முழுவதும் பகுத்தறிவின் அவசியத்தை வலியுறுத்தியவர் ஆவார். இவர் பல இடங்களில் பகுத்தறிவு இயக்கங்களை நிறுவியுள்ளதால் 'பகுத்தறிவின் பகலவன்' என்றும் போற்றப்படுகிறார். பகுத்தறிவுக்கு முக்கியத்துவம் கொடுத்த பெரியார் பின் நவீனத்துவ சிந்தனைகளோடு எவ்வாறு ஒத்துப்போகிறார் என்கிற புரிதல் பெரியாரிய அரசியல் அணுகுமுறைக்கு அவசியமாகிறது.

மத்தியக் காலக்கட்டத்தில் மேலைச் சூழலில் தோன்றிய தத்துவங்கள் மதத்தின் எடுபிடிகளாக இருந்து வந்துள்ளன. பதினைந்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர் மதநீக்கச் செயல்பாடுகள் அனைத்துத் துறைகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனடிப்படையிலானக் காலக்கட்டமே மறுமலர்ச்சிக்காலம் (Renaissance) என்றும் அறிவொளிக்காலம் (Enlightenment) என்றும் குறிப்பிடுவர். இவ்வாறு மத்தியக்காலக் கட்டத்திற்குப் பின்னர் தோன்றிய காலம் நவீனக்காலம் எனப்படுகிறது. இந்தியாவில் நவீனத்துவம்

என்பது பார்ப்பனீயத்தையும் சாதிய உற்பத்தி முறையையும் உள்வாங்கியே வளர்ந்து வந்துள்ளது. தத்துவம், உலகளாவிய பார்வை, மொழி, கலை, இலக்கியம், அரசியல் போன்றனவற்றில் நவீனத்துவத்தின் முக்கிய பண்பாகிய மதநீக்கம் எதிலும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகவும் உள்ளது. "மேலைச் சூழலில் பின் நவீனத்துவச் சிந்தனையாளர்களுக்கிருந்த வாய்ப்பு தமிழ்ச் சூழலில் நமது பெரியாருக்கு இல்லை. ஃபூக்கோவும் தெரிதாவும் ல்யோதார்த்தும் அங்கே மதநீக்கம் செய்யப்பட்ட சூழலில் இயங்கிவர்கள். பெரியாரோ சகல துறைகளிலும் மதக்கறை படிந்த ஒரு சூழலில் பணிசெய்ய நேர்ந்தவர். மற்ற சமூகங்கள் மதத்தின் பிடியிலிருந்து, விசுவாசத்தின் பிடிலிருந்து விடுவித்துக்கொண்ட மானமுள்ள சமூகங்கள். கடவுளின் ஆட்சியை வீழ்த்தி அறிவின் ஆட்சியை நிர்மாணித்த சமூகங்கள்." என்று குறிப்பிடுகின்றார் (Marks, 2010). இவற்றின் பின்புலத்திலிருந்து பெரியாரிய அரசியலை அடையாளம் காண வேண்டியுள்ளது. மனிதன் சுயமரியாதையும் பகுத்தறிவுமின்றி காணப்படுகின்றான். முதலில் மனிதனை மதத்திலிருந்து பிரித்தாக வேண்டும் என்பதே பெரியாரின் முதற்பணியாக இருந்துள்ளது. மொழி முதலான மனிதனின் அடிப்படை ஆதாரங்களை 'மதத்திலிருந்து பிரித்தாக வேண்டும்' என்பதைப் பெரியார் வலியுறுத்தியும் வந்துள்ளார். இவ்வாறு தமிழ்ச் சமூகத்திற்கு எதிரான மரபாகக் கட்டமைக்கப்பட்ட அனைத்தையும் தூக்கி எறிய வேண்டும் என்கிறார். இது பெரியாரின் எதிர்க் கலாச்சார நிலைப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. ஒரு கருத்திற்கு எதிர்கருத்தை முன்வைப்பதே பெரியாரின் தன்னிலை விளக்கமாக இருந்துள்ளது. "தன்மானத்தையும் பகுத்தறிவையும் பெரியார் தொடர்ந்து வற்புறுத்தி வந்தார். எனினும் பகுத்தறிவின் வன்முறையை உணராதவராக அவர் இருந்ததில்லை. மனிதன் மற்ற பிராணிகளைக் காட்டிலும் எந்த விதத்திலும் உயர்ந்தவனில்லை என்றார். பகுத்தறிவை ஒரு வேறுபாடகச் சொன்னீர்கள் என்றால் இந்தப் பகுத்தறிவை வைத்துக் கொண்டு அவன் என்ன சாதித்துக் கிழித்தான் என்று வினவினார். மற்ற பிராணிகளிடத்திலில்லாத மூட நம்பிக்கைகளும் வருண சாதிக் கொடுமைகளும் வர்க்கச் சுரண்டலும் பெண்ணடிமைத்தனமும் இந்தப் பகுத்தறிவுள்ள மனிதனிடந்தானே மண்டிக்கிடக்கிறது. எனில் பகுத்தறிவால் என்ன பயன், வெங்காயம் என்று நகைத்தார்." பகுத்தறிவு மனித இனத்திற்கு எதிராக திரும்பும் போது அவற்றை எதிர்க்கின்ற பண்பை பெரியாரிய அரசியலில் காணமுடிகின்றது (Marks, 2010). இது பின் நவீனத்துவ அரசியலில் பெரியாரிய அரசியலின் பொருத்தப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. சாதியும் மதமும் மனிதனை பிளவுபடுத்தி ஏற்றத்தாழ்வுகள் உள்ள சமூகத்தைக் கட்டமைத்துள்ளது. இதனை அடியொற்றிய 'பேய்க்கவிதைகள்' என்ற தலைப்பிலமைந்தக் கவிதை,

"உள்ளூர் சாமிக்கு

சாதியும்

வெளியூர் சாமிக்கு

மதமும் பிடித்திருக்கிறது

குழந்தைகளுக்கு

சொல்ல வேண்டியிருக்கிறது

இதுமாதிரியான பேய்க்கதைகள் பற்றியும்"

சாதியையும் மதத்தையும் பற்றிக் குழந்தைகளுக்குப் பேய்க் கதைகளாகச் சொல்ல வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டுகிறது (Kaviri Nadan, 2016). சாதியும் மதமும் மக்களின் சுயமரியாதையை பறித்து மந்தைகளாக நடத்துகின்ற போக்குகளும் காணப்படுகின்றன. இவற்றிற்கு எதிராக கடவுள் மறுப்பையும் சாதி மறுப்பையும் வலியுறுத்துகின்ற பெரியாரிய அரசியலை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தைக் கவிஞரின் வழிநின்று அறியமுடிகிறது.

## முடிவுரை

நவீனத்துவ அரசியலின் போதாமைகளையும் மாற்று அரசியல் சிந்தனைகளையும் உள்ளடக்கியதே பின் நவீனத்துவ அரசியலாகும். கட்டவிழ்ப்பு அரசியல், மிச்சங்களின் அரசியல், வித்தியாச அரசியல் ஆகியன மூன்றும் பின் நவீனத்துவ அரசியலின் அடிப்படைக் கூறுகளாகும்.

வித்தியாசப் பெண்ணியம் பொதுவாக பெண்ணியப் பார்வையிலிருந்து வேறுபாடுகிறது. இதுவரை நேர்க்கோட்டில் பார்த்தவைகளை மாற்றி எல்லாவற்றையும் தலைகீழாகக் கவிழ்த்துப்பார்க்கச் சொல்கிறது. ஒரு விளிம்புநிலை பெண் ஆதிக்கச் சாதிக்கு எதிராக தன் சாதியை பட்டென்று அறிவிக்கும் துணிவை பெற்றிருத்தலை அறியமுடிகிறது. தலித்துக்களுக்கிடையில் ஒற்றுமையில்லை என்பதைக் கண்டறிதல், உரையாடல் வழி ஒன்றிணைக்கப்பட வேண்டுமென்பதும் தெளிவாகிறது. பெருங்கடவுளர்களுக்கு எதிராக சிறுதெய்வங்களின் ஒருங்கிணைவைக் கோருவதையும் பின் நவீனத்துவ அரசியலில் காணமுடிகிறது. சமூகத்தின் பொதுவெளியில் விளிம்புநிலையினரான திருநங்கையர்களுக்கும் சமஉரிமை வழங்கப்பட வேண்டுமென்பது வலியுறுத்தப்படுகிறது. சாதிய மதக் கருத்துக்களுக்கு எதிரான பெரியாரிய அரசியலின் எதிர்ப்புப் பண்பு பின் நவீனத்துவ அரசியலுடன் பொருந்தி வருவதையும் அறியமுடிகிறது.

## References


Kaviri Nadan, T., (2016) Kaluthil Maatti Konda Muttham, Paavai Publication, Chennai, India.

Marks, A., (2010) Pin Naveena Nilai Elakkiyam Arasiyal Thesiyam, Pulam Publication, Chennai, India.

Muthukumarasami, M.T., (2012) Neer Alaithal, Nattrinai Pathippagam, Chennai, India.

Salma, (2014) Pachai Devathai, Kalachuvadu Pathippagam, Nagarcoil, India.

Sivagami, (2012) Payanatra Kanneer, Uyirmai Pathippagam, Chennai, India.

Sukirtharani, (2010) Iravu Mirugam, Kalachuvadu Pathippagam, Nagarcoil, India.

Suresh, M.G., (2009) Pin Naveenathuvam Endral Enna?, Adaiyalam Publication, Puthanatham, Tiruchirappalli, India.

Thirumagan, (2014) Kalivaraikul Olinthirukkum Kadauvl, Aram Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License